නිදහස් මාධ්‍ය ව්‍යාපාරය
சுதந்திர ஊடக இயக்கம்
FMM SRI LANKA Free Media Movement

# මාධ්‍ය නිදහස: නිරීක්ෂණ වාර්තාව
# ஊடக சுதந்திரம்: கண்காணிப்பு அறிக்கை
# Media Freedom Rights Monitoring Report


MFRMD

2022 ஜனவரி

Vol. 02 - தொகுதி 01



மாங்குளம் நீதிமன்ற வளாகத்திற்கு வெளியே செய்தி சேகரிப்பில் ஈடுபட்டிருந்த ஊடகவியலாளர் சண்முகம் தவசீலனை மாங்குளம் பொலிஸ் அதிகாரிகள் அவரின் பணிகளை மேற்கொள்ளவிடாமல் இடையூறு செய்துள்ளமை சம்பவம்.



12 ஆண்டுகளுக்கு முன்னர் காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவுக்கு நியாயம் கிடைக்க வேண்டும் என பிரார்த்தித்து, அவரது மனைவி சந்தியா எக்னெலிகொட 56 ஆண்டுகளாக பராமரித்து வந்த தனது தலைமுடியை முற்றாக வழித்து மொட்டையடித்து அதனை காணிக்கையாக செலுத்தி, விசேட பூஜையொன்றை மேற்கொண்டமை.



நடிகரும் சமூக ஊடக செயற்பாட்டாளருமான சுதத்த திலகசிறி, சமூக ஊடகங்களில் கருத்து தெரிவித்தமை தொடர்பில் விசாரணைக்காகக் குற்றவியல் விசாரணை திணைக்களத்திற்கு அழைக்கப்பட்டமை.

## "சமூக நெருக்கடி காலங்களில் சமூக மாற்றத்தில் ஊடக சுதந்திரம் முக்கிய பங்கு வகிக்கிறது"

– Global Campus of Human Rights - Twitter message

கடந்த சில தசாப்தங்களாக, அனைத்து குடிமக்களுக்கும் மனித மற்றும் அடிப்படை உரிமைகள் சமமான முறையில் அணுகுவதனை உறுதி செய்வதற்கான தொடர் முயற்சியின் விளைவாக, "உரிமைகள்" என்ற யுகத்தில் நாங்கள் அனைவரும் தடம் பதித்துள்ளோம். "சர்வதேச, உச்ச உரிமைகள் சட்டம்" எனக் குறிப்பிடப்படும் அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம் (1945), சிவில் அரசியல் உரிமைகள்பற்றிய சர்வதேச உடன்பாட்டு ஒப்பந்தம் (1967) பொருளாதார, சமூக, பண்பாட்டு உரிமைகள்பற்றிய சர்வதேச உடன்பாட்டு ஒப்பந்தம் (1967) மற்றும் அவற்றில் அடங்கும் மாற்று நெறிமுறைகளின் (ப்ரோடோகோல்) மூலம் வெளியிடப்பட்ட மனித உரிமைகளும் அதே சமயம், இலங்கை சட்டக் கட்டமைப்பில் உள்ளடங்கும் அடிப்படை உரிமைகளின் தொகுப்பும் "உரிமை யுகத்தின்" குடிமக்களின் வெற்றியாகக் குறிப்பிடலாம்.

ஆனால் வளர்ந்து வரும் சமூக, பொருளாதார, அரசியல், சுற்றுச்சூழல் மற்றும் சுகாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் பிரஜைகளின் சுதந்திர எல்லைகளை வரையறுக்கும் விதிகள் மற்றும் நடைமுறைகள், மன்னராட்சியை நினைவுபடுத்தும் வகையில் அதிகாரிகளின் ஒருதலைப்பட்சமான முடிவுகள், "உரிமைகளின் யுகத்தின்" வெற்றிகளுக்கு சவாலாகவே காணப்படுகின்றன.

நெருக்கடிகளில் இருந்து மீள்வதற்கான கருவியாக ஊடக சுதந்திரம் வரலாற்றில் ஆற்றிய பங்கை சுதந்திர ஊடக இயக்கம் இத்தருணத்தில் நினைவு கூர்ந்துள்ளது. சுதந்திரத்தின் எல்லைகளை விரிவுபடுத்த மறு தலையீடு செய்யும் செயல்முறை தேசிய மற்றும் சர்வதேச ஒத்துழைப்பினூடாக மேலும் வலுவடைய வேண்டும் என சுதந்திர ஊடக இயக்கம் எதிர்பார்க்கின்றது

**சுதந்திர ஊடக இயக்கம்**

**ஊடக சுதந்திரம் குறித்து ஜனவரி மாதத்தில் நடைபெற்ற சம்பவங்கள் மற்றும் முந்தைய சம்பவங்களின் பின்தொடர்வுகள் தொடர்பில் சுருக்கமான முறையில் கண்காணித்து இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இந்த அறிக்கையானது ஊடகவியலாளர்கள் மற்றும் பொதுமக்களின் பேச்சு உரிமை, கருத்துரிமை தொடர்பான பிரச்சினைகள், புதிய சட்ட உருவாக்கம் மற்றும் சர்வதேச சமூகத்தின் செயற்பாடுகள் தொடர்பாகவும் கவனம் செலுத்துகிறது. ஊடக சுதந்திரம் மற்றும் ஊடக உரிமைகள் தொடர்பில் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக சுதந்திர ஊடக இயக்கம் தேர்ந்தெடுத்துள்ள பகுதிகூறுகள் மற்றும் நோக்கங்களுக்கு அமைய 17 நிகழ்வுகள் மற்றும் சம்பவங்கள் ஜனவரி 2022 அறிக்கையில் உள்வாங்கபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இவற்றில் ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் தொடர்பான 5 சம்பவங்கள், சட்ட விதிமுறைகள் அல்லது சட்டரீதியான கட்டுப்பாடுகள் தொடர்பான 7 சம்பவங்கள், கட்டமைப்பு ரீதியான விதிமுறைகள் உட்பட்ட 5 சம்பவங்கள் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளன.**

## ஜனவரி மாதத்தில் அறிக்கையிடப்பட்ட சம்பவங்கள்:

1. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச வாகனத்தில் பயணித்து கொண்டிருந்த போது, ஹூ சத்தமெழுப்பி கிண்டல் செய்த, வீடியோக்கள் சமூக வலைத்தளங்களில் வைரலாகியுள்ளன. அந்த வீடியோவை சமூக வலைத்தளங்களில் பகிர்ந்தார் என்ற குற்றச்சாட்டின் கீழ் பெண்ணொருவர், குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு அழைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டமை .
2. 'கருத்துச் சுதந்திரத்திற்கு எதிராக' திவயின பத்திரிகைக்கு பொலிஸ் ஊடகப் பேச்சாளர் வழங்கிய அறிக்கை தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் விசாரணை.
3. ஹெஷ்டேக் தலைமுறை அமைப்பு தனது Facebook பக்கத்தில் நேரலையாகச் சட்டத்தின் ஆட்சி, பேச்சு சுதந்திரம் மற்றும் ஜனநாயகம் போன்ற தலைப்புகளில் திறந்த விவாதங்களை ஏற்பாடு செய்தல்.
4. இலங்கை தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழு பிறப்பித்த உத்தரவுக்கு எதிராகப் பாராளுமன்ற பொதுச் செயலாளர் தாக்கல் செய்த மேல்முறையீட்டு வழக்கிலிருந்து இரு நீதிபதிகள் நீங்கியமை.
5. யூடியூப் எல்எல்சி நிறுவனத்திற்கு மற்றும் கொழும்பு டுடே யூடியூப் அலைவரிசைக்கு எதிராகக் கொழும்பு மாவட்ட நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.
6. தகவல் தொழிநுட்ப சங்கம் இலங்கை அமைப்பின் (ITSSL) தலைவர் யசிரு குருவிட்ட, "கருத்துப் பகிர்வு குற்றச்சாட்டில்" தான் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டதை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனு தாக்கல் செய்துள்ளார்.
7. நடிகரும் சமூக ஊடக செயற்பாட்டாளருமான சுதத்த திலகசிறி, சமூக ஊடகங்களில் கருத்து தெரிவித்தமை தொடர்பில் விசாரணைக்காகக் குற்றவியல் விசாரணை திணைக்களத்திற்கு அழைக்கப்பட்டமை.
8. அருண பத்திரிகைக்கு எதிராகப் பிரபல இலக்கியவாதியும் அரசியல் செயற்பாட்டாளருமான காமினி வியங்கொட தாக்கல் செய்திருந்த வழக்கு சமரசம் மூலம் தீர்க்கப்பட்டது.
9. பல பாரிய ஊழல்கள் மற்றும் முறைகேடுகளை அம்பலப்படுத்திய பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் (CAA) முன்னாள் நிறைவேற்றுப் பணிப்பாளர் துஷான் குணவர்தன வெளிநாடு செல்வதை தடுக்க குடிவரவு குடியகல்வு திணைக்கள அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொண்டமை.
10. பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த அஹ்னாப் ஜஸீம் புத்தளம் மேல் நீதிமன்றத்தினால் பிணை வழங்கப்பட்ட பின்னரும் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டமைக்கு எதிராக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டமை.
11. மாங்குளம் நீதிமன்ற வளாகத்திற்கு வெளியே செய்தி சேகரிப்பில் ஈடுபட்டிருந்த ஊடகவியலாளர் சண்முகம் தவசீலனை மாங்குளம் பொலிஸ் அதிகாரிகள் அவரின் பணிகளை மேற்கொள்ளவிடாமல் இடையூறு செய்துள்ளமை சம்பவம்.
12. ஹியுமன் ரயிட்ஸ் வொச் அமைப்பின் "2022உலக அறிக்கையில்" இலங்கை பற்றிய அத்தியாயத்தில் இலங்கை அரசாங்கத்தின் மனித உரிமைகள் நடத்தைமீதான விமர்சனம் மற்றும் அது தொடர்பாக வெளிவிவகார அமைச்சின் பதில்.
13. 12 ஆண்டுகளுக்கு முன்னர் காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவுக்கு நியாயம் கிடைக்க வேண்டும் என பிரார்த்தித்து, அவரது மனைவி சந்தியா எக்னெலிகொட 56 ஆண்டுகளாக பராமரித்து வந்த தனது தலைமுடியை முற்றாக வழித்து மொட்டையடித்து அதனை காணிக்கையாக செலுத்தி, விசேட பூஜையொன்றை மேற்கொண்டமை.
14. பெயரிடப்பட்ட நிறுவனங்கள் மற்றும் சில துறைகளில் பணியாற்றும் ஊழியர்களின் வேலைநிறுத்த உரிமையை அரசியலமைப்புச் சட்டத்தில் தடைசெய்ய வேண்டும் என நீதியமைச்சர் செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தமை.
15. "படுகொலை செய்யப்பட்ட, காணாமல் ஆக்கப்பட்ட, தாக்கப்பட்ட மற்றும் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதியை நிலைநாட்டுங்கள்" என்ற தொனிப்பொருளில் சுதந்திர ஊடக இயக்கம் மெய்நிகர் கருத்தாடல் ஒன்றை ஏற்பாடு செய்தமை.
16. தமது உயிர் அச்சுறுத்தலைப் பொருட்படுத்தாமல் பிரஜைகளின் தகவல் அறியும் உரிமையை உறுதிசெய்யும் முகமாக ஊடக தொழிற்துறையில் ஈடுபடுகையில் பல்வேறு வன்முறைகளை எதிர்கொண்ட இந்நாட்டு ஊடகவியலாளர்களுக்கு நீதியை நிலைநாட்டக் கோரி அழுத்தம் கொடுக்கும் வகையில் அவர்களுக்கு நீதி கோரி நினைவேந்தல் நிகழ்வு கொழும்பில் இடம்பெற்றமை.
17. குருநாகலில் லங்காதீப ஊடகவியலாளராக பணியாற்றும் சாந்தனி திஸாநாயக்க ஊடக அறிக்கையிடலின்போது மாநகர சபை அதிகாரிகளினால் இடையூறு விளைவிக்கப்பட்டமை.

**அட்டவணை எண்: 01 அறிக்கையிடப்பட்ட மொத்த சம்பவங்களின் எண்ணிக்கை – 2022 ஜனவரி மாதம்**

| உள்ளடக்கப்பட்டுள்ள பகுதிக்கூறுகள் | அறிக்கையிடப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை |
|---|---|
| பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் | 05 |
| சட்டவிதி முறைகள் அல்லது சட்டரீதியான கட்டுபாடுகள் | 07 |
| கட்டமைப்பு ரீதியான விதிமுறைகள் | 05 |
| **மொத்தம்** | **17** |

## ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம்

**ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் எனப்படுவது ஊடகவியலாளர்கள் தங்களது தொழிலை உடல்சார் மற்றும் மனரீதியாக ஒர்முகப்படுத்தி சுயாதீனமாக தமது ஊடக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான சுதந்திர மற்றும் சுயாதீன சூழல் ஆகும். இது ஊடக சுதந்திரத்தின் அடிப்படை காரணியாகவும் காணப்படுகின்றது. அதே சமயம், ஊடகச் சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் ஆகியவற்றைப் பாதுகாக்க வேண்டுமாயின், குடிமக்கள் ஊடகங்களில் அல்லது வேறு வழிகளில் எதிர்விளைவுகளை அல்லது தனது பாதுகாப்பிற்கு எவ்வித பாதிப்புக்களையும் எதிர்நோக்காமல் சுதந்திரமாக தனது கருத்தை வெளிப்படுத்தும் சூழல் உருவாக வேண்டும். கருத்துச் சுதந்திரம் என்பது அமைதியான முறையில் ஒன்றுகூடல், அமைதியான முறையில் போராட்டம் மேற்கொள்ளல் மற்றும் எதிர்ப்பு தெரிவித்தல் போன்ற உரிமைகளை உள்ளடக்கியதாகும். இந்த அடிப்படை உரிமைகள் மீறப்பட்ட ஐந்து சம்பவங்கள் ஜனவரி மாதத்தில் அறிக்கையிடப்பட்டுள்ளன.**

**அட்டவணை 2: 2022 ஜனவரி மாதம்: ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் – சம்பவங்கள் 05**

| குறிகாட்டி | அறிக்கையிடப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை |
|---|---|
| உளவியல் ரீதியான துஷ்பிரயோகம் | 05 |
| **மொத்தம்** | **05** |

1. **ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச வாகனத்தில் பயணித்து கொண்டிருந்த போது, ஹூ சத்தமெழுப்பி கிண்டல் செய்த, வீடியோக்கள் சமூக வலைத்தளங்களில் வைரலாகியுள்ளன. அந்த வீடியோவை சமூக வலைத்தளங்களில் பகிர்ந்தார் என்ற குற்றச்சாட்டின் கீழ் பெண்ணொருவர், குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு அழைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டமை.**

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச வாகனத்தில் பயணித்துக் கொண்டிருந்தபோது, ஹூ சத்தமெழுப்பி கிண்டல் செய்த, காணொளிகளைச் சமூக வலைத்தளங்களில் பகிர்ந்தமை என்ற குற்றச்சாட்டில் குற்றவியல் விசாரணைத் திணைக்களத்தின் 15 பேர் கொண்ட அதிகாரிகள் குழு தன்னை குற்றவியல் விசாரணை திணைக்களத்திற்கு அழைத்துச்சென்று விசாரணை மேற்கொண்டதாகச் சமூக ஆர்வலரான ஆஷா தில்ருக்ஸி பெரேரா ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு தெரிவித்தார். தனது எதிர்ப்பையும் மீறி, காவல்துறை தனது தொலைபேசியில் உள்ள அனைத்து தரவுகளையும் நகலெடுத்ததாகவும் அவர் மேலும் கூறினார். அதேசமயம் ஜனாதிபதியை அவமதிக்கும் விதத்தில் கருத்துப் பகிர்வது குற்றவியல் சட்டத்தில் தண்டனை வழங்ககூடிய குற்றம் எனறு காவல்துறை அதிகாரிகள் கூறியதை உறுதிப்படுத்தும் விதத்தில் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பின்னர் தெரிவித்த கருத்தின் காரணமாகக் கருத்துச் சுதந்திரம் குறித்து சமூகத்தின் மத்தியில் காரசாரமான விவாதம் ஏற்பட வழிகோலியது.

ஆதாரம்: https://www.youtube.com

2. **நடிகரும் சமூக ஊடக செயற்பாட்டாளருமான சுதத்த திலகசிறி, சமூக ஊடகங்களில் கருத்து தெரிவித்தமை தொடர்பில் விசாரணைக்காகக் குற்றவியல் விசாரணை திணைக்களத்திற்கு அழைக்கப்பட்டமை.**

நடிகரும் சமூக ஊடக செயற்பாட்டாளருமான சுதத்த திலகசிறி தனது Talk with Sudaththa YouTube நிகழ்ச்சி மற்றும் ஏனைய சமூக ஊடக செயற்பாடுகள்குறித்த அவரது கருத்துக்கள் அரசாங்கத்தை அவமதிக்கப்பட்டுள்ளதாக “ரட்ட ஹிதெதி கலாகருவோ” என்ற அமைப்பினால் மேற்கொள்ளப்பட்ட முறையீட்டின் படி இந்த விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

15-01-2022 அன்று சுமார் 4 மணி நேரம் அவரிடம் இருந்து வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டதுடன் அவரின் உதவிக்கு வந்த வழக்கறிஞர்களைக் குறித்த விசாரணையைப் பார்வையிட அனுமதி வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஆதாரம்: 1. https://divaina.lk 2. https://www.youtube.com

3. **பல பாரிய ஊழல்கள் மற்றும் முறைகேடுகளை அம்பலப்படுத்திய பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் (CAA) முன்னாள்**

**நிறைவேற்றுப் பணிப்பாளர் துஷான் குணவர்தன வெளிநாடு செல்வதை தடுக்க குடிவரவு குடியகல்வு திணைக்கள அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொண்டமை.**

கடந்த ஜனவரி மாதம் 22ஆம் திகதி அமெரிக்கா பயணிக்க கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு சென்ற போது, வெலிசர நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் சந்தேகநபராகப் பெயரிடப்பட்டுள்ளதால் அவர் வெளிநாடு செல்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாகக் குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். எவ்வாறாயினும், அவ்வாறான வழக்கு அல்லது பயணத்தடை குறித்து தான் அறிந்திருக்கவில்லை எனவும், தாம் அம்பலப்படுத்திய சதொச பூண்டு மோசடி வழக்கில் சந்தேகநபராக அவர் பெயரிடப்பட்டுள்ளதாகப் பின்னர் அறியமுடிந்தது எனவும் துஷான் குணவர்தன ஊடகவியலாளர் சந்திப்பில் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு எதிராக அடிப்படை உரிமை மீறல் மனுவொன்றை தாக்கல் செய்யவுள்ளதாகவும், சதொச பூண்டு மோசடி அம்பலமானதன் பின்னர் தமக்கு விடுக்கப்பட்ட மரண அச்சுறுத்தல்கள் தொடர்பிலான அனைத்துத் தகவல்களும் குற்றவியல் விசாரணைத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்ட போதிலும் அது தொடர்பில் இதுவரை எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஆதாரம்: 1. https://island.lk

4. **மாங்குளம் நீதிமன்ற வளாகத்திற்கு வெளியே செய்தி சேகரிப்பில் ஈடுபட்டிருந்த ஊடகவியலாளர் சண்முகம் தவசீலனை மாங்குளம் பொலிஸ் அதிகாரிகள் அவரின் பணிகளை மேற்கொள்ளவிடாமல் இடையூறு செய்துள்ளமை சம்பவம்.**

கடந்த ஜனவரி மாதம் 29ஆம் திகதி மாங்குளம் நீதிமன்றில் வழக்கு ஒன்று தொடர்பில் அறிக்கையைப் பெற்றுக்கொள்வதற்காக நீதிமன்ற வளாகத்திற்கு வெளியிலிருந்து பெயர் பலகையைப் படம் பிடிக்கும் போதே இந்த இடையூறு சம்பவம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் அது குறித்து அவர் தெரிவிக்கையில் அரசாங்க தகவல் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட ஊடக அடையாள அட்டையைத் தான் காட்டியபோது, நீதிமன்ற அதிகாரிகளிடம் காட்டுவதாகக் கூறி அதனை எடுத்துச் சென்றதாகவும், மேலும் பொலிஸ் அதிகாரிகளின் கையடக்கத் தொலைபேசியிலிருந்து தன்னைப் புகைப்படம் எடுத்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யவுள்ளதாக ஊடகவியலாளர் தெரிவித்தார்.

ஆதாரம்: FMM Media Rights Monitoring Desk

5. **குருநாகலில் லங்காதீப ஊடகவியலாளராக பணியாற்றும் சாந்தனி திஸாநாயக்க ஊடக அறிக்கையிடலின்போது மாநகர சபை அதிகாரிகளினால் இடையூறு விளைவிக்கப்பட்டமை.**

குருநாகல் வாரச்சந்தையில் நிலவும் குப்பை பிரச்சினையைக் காணொளி காட்சியாக எடுக்கும்போது வாரச்சந்தை பணியாளர்கள் இடையூறு விளைவித்ததுடன், அவர் அறிக்கையிடுவதையும் தடுத்ததுடன், அத்துடன் நிறுத்திவிடாமல் பொதுவெளியில் அவரை அவமானப்படுத்தும் வகையில் செயற்பட்டுள்ளனர். இது தொடர்பில் மாநகர ஆணையாளருக்கு தெரியப்படுத்தியபோது, குப்பை கூட மாநகர சபையின் சொத்து எனவும், வாராந்தசந்தை குறித்து அறிக்கையிட மாநகர சபையின் அனுமதியை பெற்றுக்கொள்ள வேண்டும் எனவும் அந்த அதிகாரி தெரிவித்ததாக குறித்த ஊடகவியலாளர் சுதந்திர ஊடக இயக்கத்திற்கு அறிவித்துள்ளார்.

ஆதாரம்: FMM Media Rights Monitoring Desk

## சட்டவிதி முறைகள் அல்லது சட்டரீதியான கட்டுபாடுகள்

**ஊடக சுதந்திரம் தொடர்பான சட்டரீதியான கட்டுப்பாடுகள் மற்றும் சட்டவிதிகள் பகுதிக்கூறுக்குள் உள்ளடங்கும் 07 சம்பவங்கள் ஜனவரி மாதத்தில் அடையாளம் காணப்பட்டன. பொலிஸ் பேச்சாளரின் கருத்து தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணைகளை ஆரம்பித்தமை மற்றும் சில உரிமை மீறல்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டமை போன்ற சம்பவங்கள் இம்மாதத்திற்கான சாதக முன்னேற்றங்கள் ஆகும்.**

**அட்டவணை 03 – 2022 ஜனவரி: சட்ட விதிமுறைகள் அல்லது சட்டரீதியான கட்டுபாடுகள்– 07 சம்பவங்கள்**

| குறிகாட்டி | அறிக்கையிடப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை |
|---|---|
| சட்ட நடவடிக்கை மேற்கொள்ளல் | 05 |
| தகவலறியும் உரிமை | 01 |
| சட்ட சீர்திருத்த முன்மொழிவுகள் | 01 |
| **மொத்தம்** | **07** |

1. **‘கருத்துச் சுதந்திரத்திற்கு எதிராக’ திவயின பத்திரிகைக்கு பொலிஸ் ஊடகப் பேச்சாளர் வழங்கிய அறிக்கை தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் விசாரணை.**

ஜனாதிபதியை அவமதிக்கும் வகையில் கருத்து வெளியிடவோ பகிரவோ முடியாது எனக் கடந்த ஜனவரி 3ஆம் திகதி திவயின பத்திரிகைக்கு, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்த கருத்து தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அதுகுறித்து அவரிடம் கேள்வி எழுப்பியுள்ளது.

தான் அவ்வாறானதொரு கருத்தைக் கூறவில்லை என்பதாகவும், திவயின பத்திரிகை ஆசிரியருக்கு இது தொடர்பில் எழுத்துமூலமாக அறியப்படுத்தியதாகவும் பொலிஸ் ஊடக பேச்சாளர் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் தெரிவித்துள்ளதுடன், இது தொடர்பில் ஆணை உறுதி வாக்குமூலம் ஒன்றை வழங்குமாறு ஆணைக்குழு அவரை அறிவுறுத்தியுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச வாகனத்தில் பயணித்துக் கொண்டிருந்தபோது, ஹூ சத்தமெழுப்பி கிண்டல் செய்த, வீடியோக்கள் சமூக வலைத்தளங்களில் வைரலாகியுள்ளன. அந்த வீடியோவைச் சமூக வலைத்தளங்களில் பகிர்ந்தார் என்ற குற்றச்சாட்டின் கீழ் பெண்ணொருவர், குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு அழைக்கப்பட்டு விசாரணை நடத்தியமை சம்பவத்தை பொலிஸ் ஊடக பேச்சாளர் மேற்கோள்காட்டி தெரிவித்த கருத்தை திவயின பத்திரிகை பிரசுரித்திருந்தது.

ஆதாரம்: https://medialk.com

2. **இலங்கை தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழு பிறப்பித்த உத்தரவுக்கு எதிராகப் பாராளுமன்ற பொதுச் செயலாளர் தாக்கல் செய்த மேல்முறையீட்டு வழக்கிலிருந்து இரு நீதிபதிகள் நீங்கியமை.**

சொத்துக்கள் மற்றும் கடன்கள் தொடர்பான அறிக்கைகளைச் சமர்ப்பித்த பாராளுமன்ற உறுப்பினர்களின் பட்டியலைக் குறித்த விண்ணப்பதாரருக்கு வழங்குமாறு தகவல் ஆணையம் பிறப்பித்த உத்தரவுக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் பாராளுமன்ற பொதுச் செயலாளர் தாக்கல் செய்த மனு ஜனவரி 11ஆம் திகதி விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் இருவரும், குறித்த வழக்கிலிருந்து விலகிக் கொள்வதாகத் தெரிவித்ததையடுத்து, அது தொடர்பான மனு மேன்முறையீட்டு நீதிமன்ற தலைமை நீதிபதிக்கு முன்வைக்கப்பட்டது.

இலங்கை தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழு பிரதிவாதியாகப் பெயரிடப்பட்டு பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்க மற்றும் பிரதி செயலாளர் நாயகம் கே.ஏ. ரோகணதீர இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளனர். தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழுவின் உத்தரவு சட்டவிரோதமானது என்றும், அந்த உத்தரவை ரத்து செய்யும் ரிட் உத்தரவைக் கோரி மனுதாரர்கள் தனது தரப்பு வாதத்தை முன்வைத்துள்ளனர்.

ஆதாரம்: 1. https://ceylontoday.lk

2. http://www.rticommission.lk

3. **யூடியூப் எல்எல்சி நிறுவனத்திற்கு மற்றும் கொழும்பு டுடே யூடியூப் அலைவரிசைக்கு எதிராகக் கொழும்பு மாவட்ட நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.**

கலிபோர்னியாவை தாய் நிறுவனமாகக் கொண்டு இயங்கும் "யூடியூப் எல்எல்சி" நிறுவனம் மற்றும் "கலம்பு டுடே" யூடியூப் அலைவரிசை இலங்கையில் உள்ள ரஷ்ய கல்வி மையத்தின் (REC Campus) நற்பெயருக்கு களங்கம் விளைவிக்கும் வகையில் யூடியூப்பில் அவதூறு காணொளிப்பதிவை வெளியிடுவதைத் தடுக்கும் வகையில், ஜனவரி 4ஆம் திகதி கொழும்பு மாவட்ட நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்தது.

"புகார்கள் மற்றும் சட்டப்பூர்வ அறிவிப்புகள் விடுக்கப்பட்டபோதிலும், சம்பந்தப்பட்ட காணொளிப்பதிவை அலட்சியமாக அகற்ற மறுத்தமை" என்ற காரணத்தால் பிரதிவாதிகளுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்க நிர்ப்பந்திக்கப்பட்டதாக முறையீட்டாளர் தெரிவித்திருந்தார். இந்த வழக்கு மார்ச் 23, 2022 அன்று மீண்டும் விசாரணைக்கு வருகிறது.

ஆதாரம்: https://counterpoint.lk

4. **தகவல் தொழிநுட்ப சங்கம் இலங்கை அமைப்பின் (ITSSL) தலைவர் யசிரு குருவிட்ட, "கருத்துப் பகிர்வு குற்றச்சாட்டில்" தான் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டதை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனு தாக்கல் செய்துள்ளார்.**

ஜனாதிபதி செயலகம் உட்பட "gov.lk" இணையத்தளங்கள்மீதான சில இணையத் தாக்குதல் சம்பவங்கள் தொடர்பில் வேறுபட்ட கருத்தைக் கொண்ட தான் கைதுசெய்யப்பட்டமையானது தம்முடைய சிந்தனை மற்றும் கருத்துச் சுதந்திரத்தை மீறுவதாகும் என மனுதாரர் தெரிவித்துள்ளார்.

ஜூன் 7, 2021 திகதி அன்று அவரைக் கைது செய்த குற்றவியல் விசாரணைத் திணைக்களம், அவர் தேவையற்ற காலதாமதமின்றி மாஜிஸ்திரேட் முன்னிலையில் ஆஜர்படுத்தத் தவறியதாகவும், "விசாரணை முடியும் வரை குற்றம் சாட்டப்பட்டவரை விளக்கமறியலில் வைக்குமாறு" பொய்யான விண்ணப்பம் முன்வைக்கப்பட்டதாகவும், பிணை வழங்கப்பட்ட பின்னரும் பிசிஆர் பரிசோதனை மேற்கொள்வதற்காகத் தொடர்ந்து தடுப்புக்காவலில் வைக்கப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். கைது செய்யப்பட்ட தனது மடிக்கணினி மற்றும் கைத்தொலைபேசியை காலவரையின்றி விடுவிக்கத் தவறியதாகக் குறித்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆதாரம்: https://counterpoint.lk

5. **அருண பத்திரிகைக்கு எதிராகப் பிரபல இலக்கியவாதியும் அரசியல் செயற்பாட்டாளருமான காமினி வியங்கொட தாக்கல் செய்திருந்த வழக்கு சமரசம் மூலம் தீர்க்கப்பட்டது.**

"பிரஜைகளின் சக்தி அமைப்பினர் நல்லாட்சியில் செழிப்புற்றனர் - தபர அமில, சரத் விஜேசூரிய, காமினி வியங்கோட மற்றும் சமன் ரத்னப்ரிய போன்றோர் பணம் சம்பாதித்த முறை" என்ற தலைப்பில், "சதி அங்க அருண" செய்திப்பத்திரிகையில் 2018-12-09 ஆம் திகதி அன்று வெளியான செய்தி அறிக்கையின் மூலம் தனக்கு கடும் அநீதி இழைக்கப்பட்டதாகக் தெரிவித்து காமினி வியங்கோட "லிபர்டி பப்ளிகேஷன் பிரைவட் லிமிடட்" நிறுவனம், அருண செய்திப்பத்திரிகை செய்தி ஆசிரியர் மகிந்த இலேபெரும மற்றும் ஊடகவியலாளர் சுரேகா சமரசேன போன்றோர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

இந்த மனு ஜனவரி 18ஆம் திகதி கொழும்பு மாவட்ட நீதிபதி அருண அலுத்கே முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, சம்பவம் தொடர்பில் 'அருண' செய்திப்பத்திரிகை நிறுவனம் மன்னிப்புக் கோரும் அறிக்கையொன்றை வெளியிட வேண்டும் என்ற நிபந்தனையுடன் வழக்கு முடிவுக்கு வந்தது.

ஆதாரம்: https://theleader.lk

6. **பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த அஹ்னாப் ஜஸீம் புத்தளம் மேல் நீதிமன்றத்தினால் பிணை வழங்கப்பட்ட பின்னரும் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டமைக்கு எதிராக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டமை.**

கவிதைத் தொகுப்பு எழுதியதற்காக பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் 18 மாதங்களுக்கும் மேலாக தடுத்து வைக்கப்பட்டிருந்த கவிஞரும் ஆசிரியருமான அஹ்னாப் ஜஸீம், மனித உரிமைகள் ஆணைக்குழுவின் புத்தளம் அலுவலகத்தில் ஜனவரி 5ஆம் திகதி இது தொடர்பில் முறைப்பாடு செய்துள்ளார்.

கடந்த 2021 டிசம்பர் 15 ஆம் திகதி அன்று புத்தளம் மேல் நீதிமன்றம் அவருக்கு பிணை வழங்கிய போதிலும், உரிய பிணை நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்ட பின்னரும் 24 மணித்தியாலங்களுக்கு மேலாக அவர் தடுத்து வைக்கப்பட்டிருந்ததாக குறித்த முறைப்பாட்டு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆதாரம்: https://www.twitlonger.com

7. **பெயரிடப்பட்ட நிறுவனங்கள் மற்றும் சில துறைகளில் பணியாற்றும் ஊழியர்களின் வேலைநிறுத்த உரிமையை அரசியலமைப்புச் சட்டத்தில் தடைசெய்ய வேண்டும் என நீதியமைச்சர் செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தமை.**

துறைமுக, சுங்கம், தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை, மின்சார சபை, பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் மருத்துவத் துறை போன்றவற்றில் வேலைநிறுத்தம் செய்யும் உரிமையை ரத்து செய்ய வேண்டும் என நீதி அமைச்சர் அலி சப்ரி ஜனவரி 27ஆம் திகதி அன்று நெத் எப்.எம் அலைவரிசையுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது தெரிவித்திருந்தார் .

தொழிற்சங்கங்கள் அடங்கிய தேசிய தொழிலாளர் ஆலோசனைக் குழு, இந்த அறிக்கைக்குக் கடும் எதிர்ப்பு தெரிவித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. "வேலைநிறுத்த உரிமை மற்றும் கூட்டு பேரம் பேசுவதற்கான உரிமை ஆகியவை உலகளாவிய உரிமைகள் எனவும், அதனைப் பாதுகாக்க எமது அரசியலமைப்பு மற்றும் சர்வதேச தொழிலாளர் அமைப்பின் இலக்கம் 87 மற்றும் 98 உடன்படிக்கைகள் மற்றும் அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனத்தின் ஊடாகவும் தேசம் என்ற அடிப்படையில் கடமைப்பட்டுள்ளோம்" என அந்த அறிக்கை மேலும் குறிப்பிட்டுள்ளது. முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையிலான சமூக நீதிக்கான தேசிய இயக்கம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது இந்த நிலைப்பாடானது அதாவது நீதி அமைச்சரின் கூற்றானது ஜனநாயகத்திற்கான பாரிய அடியாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆதாரம்: https://theleader.lk

## கட்டமைப்பு ரீதியான விதிமுறைகள்

**'கட்டமைப்புரீதியான விதிமுறைகள் "ஊடக சுதந்திரத்தின் மற்றொரு முக்கிய அங்கமாகும். ஊடக தொகுதியின் முழு கட்டமைப்பிற்கும் மற்றும் ஊடக சுதந்திரம் இயக்கப்படும் ஒட்டுமொத்த சூழலுக்கும் பொருந்தக்கூடிய 06 சாத்தியமான குறிகாட்டிகளை உள்ளடக்கியுள்ளது. அவற்றில் "கண்காணிப்புக் குழுக்களின் ஊடக சுதந்திரத்திற்கான செயல்திறன்சார் ஆதரவு" என்ற குறிக்காட்டியின் கீழ் 5 சம்பவங்கள் ஜனவரி மாதத்தில் கண்காணிக்கப்பட்டது. படுகொலை செய்யப்பட்ட மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர்களை நினைவுகூரும் "கருப்பு ஜனவரி" யை முன்னிட்டு பல நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டமை, அத்துடன் நீதி பெற்றுக்கொள்வதற்கான தாமதம் தொடர்பாகச் சந்தியா எக்னலிகொட மேற்கொண்ட பரப்புரைப்பை ஏற்படுத்திய செயற்பாடும் இவற்றில் பிரதானமானதாகும்.**

**அட்டவணை 04 – 2022 ஜனவரி கட்டமைப்புரீதியான விதிமுறைகள் – 05 சம்பவங்கள**

| குறிகாட்டி | அறிக்கையிடப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை |
|---|---|
| கண்காணிப்பு குழுக்களின் ஊடக சுதந்திரத்திற்கான ஆதரவு | 05 |
| **மொத்தம்** | **05** |

1. **ஹெஷ்டேக் தலைமுறை அமைப்பு தனது Facebook பக்கத்தில் நேரலையாகச் சட்டத்தின் ஆட்சி, பேச்சு சுதந்திரம் மற்றும் ஜனநாயகம் போன்ற தலைப்புகளில் திறந்த விவாதங்களை ஏற்பாடு செய்தல்.**

"ஹூ சத்தமெழுப்பி கூச்சலிட்டால் சிறையிலா?" என்ற தலைப்பில் ஜனவரி 09 ஆம் திகதி நடைபெற்ற இந்தக் கருத்தாடலுக்கு அடிப்படையாக அமைந்தது ஜனாதிபதியை கிண்டல் செய்யும் வகையில் ஹூ சத்தமெழுப்பி கூச்சலிட்டமை மற்றும் பொலிஸ் ஊடக பேச்சாளர் அதுகுறித்து தெரிவித்த கருத்தே ஆகும்.

சட்டத்தரணி திஷ்ய வெரகொட, சட்டத்தரணி அர்மிசா டீகல், சட்டத்தரணி நெத்மினி மெதவல ஆகியோர் இந்தக் கருத்தாடலில் கலந்துகொண்டனர்.

அந்த கருத்தாடலின் இணைய இணைப்பு:
https://www.facebook.com

2. **ஹியுமன் ரயிட்ஸ் வொச் அமைப்பின் "2022 உலக அறிக்கையில்" இலங்கை பற்றிய அத்தியாயத்தில் இலங்கை அரசாங்கத்தின் மனித உரிமைகள் நடத்தைமீதான விமர்சனம் மற்றும் அது தொடர்பாக வெளிவிவகார அமைச்சின் பதில்.**

சிறுபான்மை இன மக்களின் மனித உரிமை மீறல்கள், சமூக ஆர்வலர்கள்மீதான அடக்குமுறை, பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் அடக்குமுறைப் பிரயோகம், சட்ட சீர்திருத்தத்திற்கான வாக்குறுதிகளை மீறுதல் போன்றவற்றை இந்த அறிக்கை எடுத்துக்காட்டியுள்ளதுடன், இது பக்கச்சார்பான அறிக்கை" என இலங்கை அரசாங்க தரப்பிலிருந்து பதில் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். "நாட்டின் தற்போதைய மனித உரிமை நிலைமை மிகைப்படுத்தப்பட்டுள்ளதாகவும், தேவையற்றதாகவும் மற்றும் எதிர்மறையானதாகக் காணப்படுவதாக வெளிவிவகார அமைச்சு மிக்க வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கின்றது."என வெளிவிவகார அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது .

ஆதாரம்: 1. https://www.hrw.org 2. https://mfa.gov.lk

3. **12 ஆண்டுகளுக்கு முன்னர் காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவுக்கு நியாயம் கிடைக்க வேண்டும் என பிரார்த்தித்து, அவரது மனைவி சந்தியா எக்னெலிகொட 56 ஆண்டுகளாக பராமரித்து வந்த தனது தலைமுடியை முற்றாக வழித்து மொட்டையடித்து அதனை காணிக்கையாக செலுத்தி, விசேட பூஜையொன்றை மேற்கொண்டமை.**

தென்னிலங்கையில், ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட கடத்தி காணாமல் ஆக்கப்பட்டு 12 வருடங்கள் பூர்த்தியை ஒட்டி ஜனவரி 24 ஆம் திகதி அவர் காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பில் நீதி கோரி அவரது மனைவி, கொழும்பு முகத்துவாரம் காளியம்மன் ஆலயத்தில் தனது முடியைக் காணிக்கைசெலுத்தி விசேட பூஜையொன்றை மேற்கொண்டுள்ளார். 12 வருடங்களுக்கு முன்னர் காணாமல் ஆக்கப்பட்ட தனது கணவருக்காக நீதியை பெற்றுக்கொள்ள முயற்சித்து வருவதுடன், அது தொடர்பில் தற்போது நம்பிக்கை தளர்வடைந்துள்ளதால் இந்தச் செயலைமேற்கொண்டதாகவும், சம்பவத்துடன் தொடர்புடைய அனைத்து தரப்பினருக்கும் இயற்கை தண்டனை வழங்கும் என்று எதிர்பார்ப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

ஆதாரம்: https://www.vikalpa.org

4. **"படுகொலை செய்யப்பட்ட, காணாமல் ஆக்கப்பட்ட, தாக்கப்பட்ட மற்றும் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதியை நிலைநாட்டுங்கள்" என்ற தொனிப்பொருளில் சுதந்திர ஊடக இயக்கம் மெய்நிகர் கருத்தாடல் ஒன்றை ஏற்பாடு செய்தமை.**

சுதந்திர ஊடக இயக்கம் வருடாந்தம் ஏற்பாடு செய்யப்படும் "கறுப்பு ஜனவரி" நினைவேந்தல் நிகழ்ச்சியான ஜனவரி 26ஆம் திகதி நடைபெற்ற மெய்நிகர் திறந்த கலந்தாய்வு நிகழ்வில், "பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் ஊடக அடக்குமுறை" என்ற தலைப்பில் சட்டத்தரணி அர்மிசா டிகல், சட்டத்தரணி பிரபோத ரத்நாயக்க " ஐ.சி.சி.பி.ஆர் சட்டம் தவறான முறையில் பிரயோகிப்படுவதால் கருத்து வெளிப்பாட்டு சுதந்திரம் மீறப்படல்" உதயன் பத்திரிகையின் முன்னாள் ஆசிரியர் தேவநாயகம் பிரேம்நாத் "அரச பாதுகாப்பு மற்றும் தமிழ் ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு" என்ற தலைப்பில் "புலனாய்வு ஊடகவியலாளர்களைக் கண்காணித்தல் மற்றும் இலக்குவைத்தல்" என்ற தலைப்பில் லசந்த ருஹுனுகே ஆகியோர் கலந்துகொண்டனர்.

உரையாடலின் தொடக்கத்தில், குறித்த மெய்நிகர் கருத்தாடல் நிகழ்வில் கலந்துகொண்டிருந்த சில ஒழுங்கமைக்கப்பட்ட நபர்களால் சில தடைகள் ஏற்படுத்தப்பட்டன.

ஆதாரம்: https://theleader.lk

5. **தமது உயிர் அச்சுறுத்தலைப் பொருட்படுத்தாமல் பிரஜைகளின் தகவல் அறியும் உரிமையை உறுதிசெய்யும் முகமாக ஊடக தொழிற்துறையில் ஈடுபடுகையில் பல்வேறு வன்முறைகளை எதிர்கொண்ட இந்நாட்டு ஊடகவியலாளர்களுக்கு நீதியை நிலைநாட்டக் கோரி அழுத்தம் கொடுக்கும் வகையில் அவர்களுக்கு நீதி கோரி நினைவேந்தல் நிகழ்வு கொழும்பில் இடம்பெற்றமை.**

"மறக்காதிருப்போம்" என்ற தொனிப்பொருளில் இலங்கை இளம் ஊடகவியலாளர்களின் சங்கம் மற்றும் உரிமைகளுக்கான ஊடகவியலாளர்கள் அமைப்பினால் ஜனவரி 31ஆம் திகதி கொழும்பு விகாரமஹாதேவி பூங்காவில் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன், ஊடகவியலார்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் கலைஞர்கள் உட்பட பலர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். வீதி நாடகம், பாடல்கள் மற்றும் மெழுகுவர்த்தி ஏந்தி படுகொலைசெய்யப்பட்ட மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர்களின் நினைவேந்தல் நிகழ்ச்சியும் இடம்பெற்றது.

ஆதாரம்: https://sinhala.lankanewsweb.net

**அட்டவணை 5: ஊடக சுதந்திரம்: 2021 ஜனவரி முதல் நவம்பர் வரை சுதந்திர ஊடக இயக்கத்தால் அறிக்கையிடப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை**

| உள்ளடக்கப்பட்டுள்ள குறிகாட்டிகள் | 2021 ஜனவரி – டிசம்பர் | | 2022 ஜனவரி |
|---|---|---|---|
| | புதிய சம்பவங்கள் | முன்னைய சம்பவங்களின் வளர்ச்சிப்போக்கு | |
| பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் | 51 | | 05 |
| சட்டவிதி முறைகள் அல்லது சட்டரீதியான கட்டுபாடுகள் | 45 | 13 | 07 |
| ஊடக சுயாதீனத்துவம் | 03 | | - |
| ஊடக சுதந்திரம் தொடர்பான புதிய, முக்கிய போக்குகள் | 01 | | - |
| கட்டமைப்பு ரீதியான நிபந்தனை | 14 | | 05 |
| நிபுணத்துவம் | 02 | | - |
| **மொத்தம்** | **116** | **13** | **17** |

2021 ஊடக சுதந்திர உரிமைகள் கண்காணிப்பு அறிக்கை ஜனவரி-டிசம்பர் வரை இங்கு பார்வையிடவும்

**பின்னுரை:** சிவில் சமூக குறிக்கோள்கள், தேசிய மற்றும் சர்வதேச வழக்கு தீர்ப்புகள் மற்றும் அனைத்துலக பிரகடனங்களுக்கு ஏற்ப, ஊடக சுதந்திரம் என்பது மனித உரிமை என சுதந்திர ஊடக இயக்கம் உடன்படுவதுடன்.அனைத்து மனிதர்களுக்கும் காணப்படவேண்டிய சிந்தனை சுதந்திரம், மனசாட்சி சுதந்திரம், மதச்சுதந்திரம் மற்றும் மற்றவர்களின் கருத்துக்களை தெரிந்து கொள்வதற்கான அடிப்படை உரிமைகளை தடையேதும் இன்றி அனுபவிப்பதற்கான சுதந்திரமே மனித உரிமையாகும். இந்த அடிப்படையில் ஊடக சுதந்திரம் என்பது பின்வரும் பத்து பகுதிகளை உள்ளடக்கிய தொகுப்பு என சுதந்திர ஊடக இயக்கம் கருதுகின்றது.

(1) சிந்தனை சுதந்திரம் (2) கருத்து தரிப்பதற்கான சுதந்திரம் (3) கருத்து வெளிப்படுத்தும் சுதந்திரம் (4) அமைதியான முறையில் மேற்கொள்ளப்படும் ஒன்றுகூடல் உரிமை மற்றும் கருத்து தெரிவிக்கும் சுதந்திரம் (5) தகவல் அறியும் உரிமை (6) கேட்டல் மற்றும் பார்த்தல் வழி சார்ந்த பதிவு செய்தல் மற்றும் அறிக்கை வைத்துக்கொள்வதற்கான சுதந்திரம் (7) பதிப்புச்சுதந்திரம் (8) செய்திப்பத்திரிகை சுதந்திரம் (9) இலத்திரனியல் ஊடக சுதந்திரம் (10) இணைய சுதந்திரம். என்பனவையே இதன் பகுதிகூறுகள் ஆகும்.

இந்த ஒவ்வொரு பகுதிகளும் ஒன்றோடொன்று தொடர்பு உடையதாக காணப்படுவதனால் ஒரு பகுதிகூறுக்கு ஏற்படும் வரையறைகள் மற்றும் தாக்கங்கள் ஊடக சுதந்திரம் தொடர்பில் காணப்படும் அனைத்து பகுதிக்கூறுக்கும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை சுதந்திர ஊடக இயக்கம் ஏற்றுக்கொள்கின்றது. எனவே பொறுப்பற்று மற்றும் வெறுப்புணர்வுடன் மேலே குறிப்பிட்ட சுதந்திரங்களை அத்துமீறி அனுபவிப்பதானது சிறந்ததொரு முறையல்ல என்பதனை சுதந்திர ஊடக இயக்கம் கருதுகின்றது.

இந்த மாதாந்த அறிக்கை தயாரிக்கபடுவது பொது ஊடகத்தில் பிரசுரிக்கப்படும் மற்றும் சுதந்திர ஊடக இயக்கத்திற்கு கிடைக்கப்பெறும் தவல்களுக்கு அமைய மேலதிக தகவல்களை தேடி அறிந்து அந்த நிகழ்வுகளை ஆய்வுக்குட்படுத்திய பின்னரேயாகும்.இந்த ஆய்வின் போது சுதந்திர ஊடக இயக்கம் மேலே குறிப்பிட்ட பத்து ஊடக சுதந்திர சுட்டெண் பகுதிகளை உள்ளடக்கிய சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஏழு தொகுப்புகளின் ஊடாக தேர்ந்தெடுக்கப்பட்ட அடிப்படை அளவுகோல்களை கொண்டே கண்காணிப்பு நடவடிக்கையை மேற்கொள்கின்றது.


Free Media Movement

Convener: Lasantha De Silva +94 71 166 7938, +94 77 810 7620 | Secretary: Hana Ibrahim +94 77 741 2995

Treasurer: Ananda Jayasekara +94 77 312 4850

No 96, Bernard Soysa Mw, Colombo 05. Tel: +94 112368895 Fax: +94 112368895;

Web: www.fmmsrilanka.lk, www.mediareform.lk

Email: fmmsrilanka@gmail.com | Facebook: https://www.facebook.com/fmm.srilanka

Twitter: https://twitter.com/FMMsrilanka | #FMM25